# சுவாமி விபுலாநந்தர், ஜோன்டியூவி ஆகியோரின் கல்வித் தத்துவங்கள் ஓர் ஒப்பீட்டாய்வு

*பாலச்சந்திரன்.பூ[1] செல்வராஜா.மா[1]*


## ஆய்வுச் சுருக்கம்

ஒப்பீட்டியல் கல்வி இன்று கல்விப் புலத்தில் மட்டுமல்ல சகல கற்கைத் துறைகளிலும் முக்கியமானதொரு பண்புக்கூறாக வளர்ச்சியடைந்துள்ளது. இரண்டு கல்வி முறைமைகளை ஒப்பிட்டு ஆராய்தல், அல்லது இரண்டு கல்வியலாளர்களின் கல்விச் சிந்தனைகளை ஒப்பீட்டு ஆராய்தல் ஆகியவை ஒப்பீட்டுக் கல்வியைச் சாரும். இந்த வகையில் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்க கல்வி வளர்ச்சிக்கும் உலகின் ஏனைய நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கும் பங்காற்றிய பயன்பாட்டு வாதக் கல்வித் தத்துவஞானி ஜோன்டியூவியின் கல்விச் சிந்தனைகளையும், கீழைத்தேய பண்பாட்டு பாரம்பரியங்களில் வளர்ந்து மேலைத்தேயக் கல்வியையும், கீழைத்தேய கல்வியையும் கற்று கல்வி, சமூகம், மொழி, கலாசாரம் எனப் பல்துறை சார்ந்த வளர்ச்சிக்கு பணியாற்றி சுவாமி விபுலாநந்தரது கல்விச் சிந்தனைகளையும் ஒப்பிட்டு நோக்குவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இதன் குறிக்கோள்களாக பின்வருவன அமையும்.

01. இருவரது ஆளுமையில் காணப்படும் விசேட அம்சங்களை ஒப்பிடல்.
02. சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தல்.
03. இவ்விருவரும் தமது சிந்தனைகளை வெளியிடுவதற்கான சமூக, பொருளாதார, அரசியல் பின்புலன்களை நோக்குதல்.
04. ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் கல்விப்புலத்தினரின் மனப்பாங்கு மேம்பாட்டினூடாகக் கல்வியில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தல்.
05. கல்விப்புலத்தில் இன்றுவரை நிகழ்ந்துள்ள மாற்றங்களில் இவ்விருவரினதும் செல்வாக்குகளை வெளிக் கொணர்தல்.


## 1. அறிமுகம்

தனிமனிதன் உடல்நலம், உளநலம் ஆகியன இணைந்த மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கும், உலக சமுதாயம் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும் சிறந்த கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் கல்வி அமைவது அவசியமாகும். செல்ல வேண்டிய பாதையை அறியாத தலைவர்களைத் தோற்றுவிக்கின்ற கல்வி பயனற்றது. கற்றல் செயன்முறையானது சமூக இருப்பின் மையவிசையாகும். காலத்தையும் இடத்தையும் கருத்தில் கொண்டு மனிதர்களிடத்தில் உவப்பான மாற்றத்தை ஏற்படுத்தும் வினையாற்றுகை கல்வியாகும்.

கீழைத்தேய மேலைத்தேய தத்துவஞானிகளும், கல்வியியலாளர்களும் கல்வி பற்றிப் பல தளங்களில் விளக்கமளித்துள்ளார்கள். 'கல்வித்தத்துவம்' என்னும் பதத்தை பகுத்து நோக்கும் போது தத்துவமானது சிந்தனைப் பகுதி, அதனோடு தொடர்புபட்ட கல்விச் செயற்பாட்டுப்பகுதியாகும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கைத்தத்துவம் இருக்க வேண்டியது அவசியமாகும். தத்துவமானது வாழ்க்கைக் கோலங்களுக்கு வழிகாட்டியாக அமையும். சொந்த வாழ்க்கைத் தத்துவத்தை அமைத்துக் கொள்வதற்குக் கல்வித்தத்துவம் வழிகாட்டியாக அமையும்.

இந்த வகையில் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்க கல்வி வளர்ச்சிக்கும், உலகின் ஏனைய நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கும் பங்காற்றிய பயன்பாட்டுவாத கல்வித்தத்துவஞானி ஜோன்டியூவியின் கல்விச் சிந்தனைகளையும், கீழைத்தேயப் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களினூடாக வளர்ந்து மேல் நாட்டுக் கல்வியையும் கீழைத்தேய கல்வியையும் துறை போகக் கற்று கல்வி, சமூகம், மொழி கலாசாரம் என்பவற்றின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய சுவாமி விபுலநந்தரின் கல்விச் சிந்தனைகளையும் ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் கீழைத்தேய, மேலைத்தேய கல்விப் பாரம்பரியத்தின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குவதோடு கல்விப் புலத்தில் உயிர்ப்பு மிகு புலமையாளராக விளங்கும் இவர்கள் சமகால கல்விப்புலத்தில் வெளிப்படுத்தும் தாக்கங்களை வெளிக்கொணர்வதும் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. இலக்கிய மீளாய்வு

ஒரு ஆய்வானது ஆய்வாளரினால் எவ்வளவு சிறப்பாக செய்து முடிக்கப்பட்டாலும் இவ்வாய்வின் பயன்தரு தன்மையை (Effectiveness) வெளிப்படுத்திக் காட்டுவதற்கு இலக்கிய மீளாய்வு (Review of Literature) பற்றிய அறிவு மிக முக்கியமானதாகும். இலக்கிய மீளாய்வு என்பது குறித்த ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட சகல ஆவணங்களையும் மீள்பார்வைக்கு உட்படுத்துவதாகும். மீள் பார்வைக்கு உட்படுத்துவதன் மூலம் தான் மேற்கொள்ளும் ஆய்வின் மெய்மைத் தன்மையையும், நம்பகத்தன்மையையும் ஆய்வாளரினால் உயர்த்திக் கொள்ள முடியும்.

[1] Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

இலக்கிய மீளாய்வை மேற்கொள்வதன் மூலம் எடுத்துக் கொண்ட ஆய்வுத் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களைப் பற்றி அறிந்துகொள்வதுடன் எவ்வாறான முன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன, என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். மேலும் தனது ஆய்வுப்பரப்பில் இன்னும் வெளிக்கொணரப்படாத விடயங்களை வெளிக் கொண்டுவர முடியுமா? என்பது பற்றியும் உசாவிக் கொள்ள முடியும்.

அந்த வகையில் இவ்வாய்வின் இலக்கிய மீளாய்வு என்னும் அத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் எடுத்து இயம்பப் படுகின்றது.

### 2.1 வாழ்க்கைப் பின்னணி

20ம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரும், உளவி யலாளரும், தத்துவஞானியும், செயல்சார்ந்த ஆசிரியருமாகிய ஜோன் டூயி (1859–1952) 1859 இல் அமெரிக்காவிலுள்ள பேர்லிங்டன் நகரில் மான்கூட் (Man hood) எனும் பிரதேசத் தில் பிறந்தார். தகப்பன் ஆச்சிபலாட் டூயி (Archi Balad Dewy). தாய்லூ சினா (Lucina). தகப்பன் ஆச்சி பலாட் டூயி களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். தாய்லூ சினா விழுமிய மற்றும் ஒழுக்கக் கல்வியை சமயக் கல்வி யிலும் பார்க்க அழுத்திக் கூறினார். இவர் வாழ்ந்த சூழலை நோக்கும் போது எளிய கிராமியச் சூழலிலிருந்து சிக்கலான நகரக் கைத்தொழில் மயப்பாட்டிற்கு தீவிர மாற்றம் அடைந்து கொண்டிருந்த சூழலில் வாழ்ந்தவர். இம்மாற்றத்தைப் பொருண்மிய ரீதியாக அணுகாது பயன்கொள்வாத அடிப்ப டையில் நோக்கியவர். ஆரம்பக்கல்வியை பேர்லிங்டன் உள்ள பண்பாட்டையும், மரபையும் பேணும் பாடசாலைக ளில் பெற்றார். தனது ஆரம்பக் கல்வியின் அனுபவங்கள் பற்றி அவர் கூறும் போது,

01. சம்பிரதாய பூர்வமான பாடசலை முறைமைகள் பயனற்றவை,
02. ஒவ்வொரு நாளும் ஏற்படும் அனுபவம் வரையறுக்கப் படவில்லை என வெளிப்படுத்தினார்.

16 வயதில் அமெரிக்க வேர்மன்ட் (Vermont) பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றியவர். கிராமப்புற பாடசாலைகளின் நலிவுகளை பட்டறிவு மூலம் உணர்ந்து கொண்டவர். கல்வியில் ஒருங்கி ணைப்பை ஏற்படுத்துதவதற்காக மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தவர். ஜோன் ஹொப்பிங்ஸ் (John Hopkins) பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இரு வருடங்களின் பின்னர் இம்மானுவல் காண்ட் (Emmanuel Kant) அவர்க ளுடைய உளவியல் சிந்தனைகளைப் பற்றி ஆய்வு செய்து கலாநிதிப்பட்டத்தை பெற்றுக்கொண்டவர். 1896 இல் ஆய்வு கூடப் பாடசாலையை (Laboratory school) நிறுவி தனது தத்துவப்போக்குகளையும், விஞ்ஞானபூர்வமான ஆய்வுக ளையும் முன்னெடுத்தவர்.

சுவாமி விபுலாநந்தர் (1892 – 1947) இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் கிராமத்தில் 1892 இல் பிறந்தார். இளமைப் பெயர் மயில்வாகனன். இயற்கை எழில்கொஞ்சும் கிராமமாகிய காரைதீவு மெ.மி.த.க. பாடசாலை யில் ஆரம்பக்கல்வியை பெற்று தொடர்ந்து கல்முனை மெதடிஸ்த வெஸ்லி பாடசாலையில் ஆங்கிலமொழி மூலம் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். தொடர்ந்து மட்டக்க ளப்பு புனித மிக்கல் கல்லூரியில் உயர் கல்வி பெற்றார். மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியிலும், கல்முனை கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலையிலும் ஆங்கில ஆசிரிய ராகப் பணியாற்றினார். 1911 -1912 ஆங்கில ஆசிரியப் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக மீண்டும் மட்/புனித மிக்கேல் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். 1915 -1916 அரசினர் பொறியியல் கல்லூரி யில் பயிற்சி பெற்று விஞ்ஞான டிப்ளோமாப் பட்டம் பெற்றார். 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டிதப் பரீட்சையில் சித்தியடைந்து தமிழ்ப் பண்டிதர் ஆனார். 1917 யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய வேளையில் இலண்டன் பல்கலைக்கழக Bsc பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந் தார். பல்துறை ஆளுமை பெற்ற இவர் 1920 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமைப் பீடத்தை அலங்கரித்தார். 1925 இல் சுவாமி விபுலாநந்தராய் தாயகம் திரும்பினார். ஸ்ரீ இராமகிஸ்ணமடலாயத்தின் கிழக்கிலங்கை பள்ளிக்கூடங் களைப் பராமரிக்கும் முகாமைத்துவப் பணியினையேற்று திறம்பட நடாத்தினார். 1928 – 1930 வரை திருகோணமலை ஆங்கிலப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியதுடன் 1929 மே மாதம் தனது சாந்திநிகேதனாக மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தை ஆரம் பித்தார். 1943- 1947 வரை இலங்கை பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றியதுடன் கல்வி சம்மந்தமான பல்வேறு பணிக ளிலும் ஈடுபட்டார். 1947 ஜுன் 5 - 6 ஆம் திகதிகளில் யாழ் நூலை அரங்கேற்றினார்.

தங்கள் வாழ்வியலில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விடயங்களில் தடம்பதித்த இவ்விருவரதும் வாழ்விலும் தாயின் செல்வாக்கும், கிராமியச் சூழலும் கணிசமான தாக்கத்தைச் செலுத்தியிருப்பதைக் காண முடியும்.

### 2.2 வாழ்க்கைத்தத்துவம்

ஜோன் டூயியின் வாழ்க்கைத் தத்துவம் பயன்பாட்டுவாதம் ஆகும். இது பரீட்சாத்தவாதம், தொழிற்பாட்டுவாதம், முன் னேற்றவாதம் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. பயன்பாட்டுவாதம் இயக்கப்பாட்டையும், எப்பொழுதும் மாறிக் கொண்டிருப்பதுமான வாழ்க்கைக் கோலத்தை வலியுறுத்து கின்றது. "உலகத்திலுள்ள அனைத்துமே நிரந்தரமற்றது. அனைத்தும் நிரந்தரமாக மாறிக்கொண்டே இருக்கின்றது" என்ற கருத்தியலை டியூவி வலிமையாகக் கொண்டிருந்தார். "அறிவு முடிவானதல்ல. அது வழிமுறையாகும். நிரந்தரமான விழுமியங்கள் என்று எதுவுமே இல்லை" என்று கூறிய

EUSL

டூயி "காலம், இடம் என்பவற்றைப் பொறுத்து விழுமியங்கள் மாறிக் கொண்டே இருக்கும்" எனத் தெரிவித்தார்.

ஒருவர் பிறந்த சூழல், வளர்ந்த சூழல், அனுஸ்டிக்கும் மத வழிபாடு என்பவை வாழ்க்கைத் தத்துவத்தில் தாக்கம் செலுத்தக் கூடியன. இந்த வகையில் ஸ்ரீமத் சுவாமி விபுலா நந்தரின் தொலைநோக்கு, கீழைத்தேய, மேலைத்தேய கலாசாரங்கள் ஆத்மீகம், உலகாயுத விழுமியங்கள், விஞ்ஞானம், வேதாந்தம் என்பவற்றின் பாற்பட்டதாக அமைகின்றது. பல்வேறு சமயங்களையும் கற்றுத் தேர்ந்த அடிகளாரின் தத்துவ தரிசனமாக வேதாந்தம் அமைகின்றது.

டியூவி கல்விக்கும், அனுபவத்திற்குமிடையில் எந்தவொரு வித்தியாசத்தையும் காணவில்லை. அறிவு என்பது அனுப வங்களின் விளைவாகும். மனித வாழ்வின் மையம் அவனது அறிவில்தான் தங்கியிருக்கின்றது. முன்னமே தீர்மானிக்கப் பட்ட எந்தவொரு உண்மையையும் நம்பாததுடன் நிரந்தர மான உண்மை என எதையுமே டூயி ஏற்றுக்கொள்ளவில்லை.

விபுலானந்த அடிகள் தெய்வீக ஆற்றலை நம்பியிருக்க, டியூவி மனித சக்தியில் மாபெரும் நம்பிக்கை கொண்டிருந் ததைக் காணலாம். தனது சொந்த அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமான பாதையைத் தானே அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் தெளிவான நோக்கம் கொண்டவராக டியூவி காணப்படுகிறார்.

### 2.3 கல்வி பற்றிய எண்ணக்கரு

டியூவி தனது காலத்துக் கல்வி முறைகளைக் கட்டுடைத்து மீள்சிந்தனைக்கு உட்படுத்தியவர். சமூக இருப்புக்கு மைய விசையாக அமையும் கருவியான கல்வி, கடந்த காலத்தில் சேமித்துக் கொண்ட ஆற்றலை, அறிவை, நோக்கத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் கருவியாக அது விளங்க வேண்டும். தனியாளில் அனைத்து ஆற்றலையும் விருத்தி யாக்கும் கருவியாக கல்வி விளங்க வேண்டும். அறிவைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டிருக்கும் செயற்பாடாக அது அமைவதுடன் சமூக முன்னேற்றத்திற்கும், மறுசீர மைப்பிற்குமான கருவியாகவும் கல்வி விளங்க வேண்டும் என்பது டியூவியின் சிந்தனையாகும்.

விபுலாநந்தரைப் பொறுத்தமட்டில் கல்வி மூலம் மனிதனை உருவாக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறுவதுடன் கல்வி ஆன்மீக வளர்ச்சிக்காகவும் இருக்க வேண்டும். அத்துடன் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதாகவும் இருத்தல் வேண்டும் எனவும் தெரிவித்தார். சமயப்பற்று, மொழிப்பற்று, தேசப்பற்று என்பவற்றை மேம்பாடடையச் செய்வதே அடிகளாரின் கல்வி பற்றிய எஎண்ணக்கருவாக அமைந்தது. விஞ்ஞானக் கல்வியையும், மெஞ்ஞானக் கல்வி யையும் தான் முகாமையாளராகப் பணியாற்றிய பாடசாலை களிலும், தனது சாந்திநிகேதனாக சிவானந்த வித்தியாலயத் திலும் சங்கமிக்கச் செய்தவர் அடிகளார். இதேபோல் ஜோன் டியூவியும் தனது ஆய்வுகூடப் பாடசாலையில் பரீட்சார்த் தங்களை மேற்கொண்டு கருத்துக்களை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

### 2.4. கல்வியின் நோக்கம்

பயன்பாட்டுவாதக் கல்வியியலாளன் என்ற வகையில் ஜோன்டியூவி கல்வியின் முதன்மையான நோக்கம், தொடர்பு ஊடகமாக இருத்தல் வேண்டும் எனவும், தொலைவிலுள்ள எதிர்காலத்தில் நிலவும் குறிக்கோள்களை நோக்கிச் செல்லாது நிகழ்காலத்துடன் தொடர்புபடுதல் வேண்டும் எனவும், அது சுதந்திர இயல்புடையதாகவும் இருத்தல் வேண்டும் எனவும், கல்வியின் நோக்கங்கள் நிரந்தரமானவை அல்லவெனவும், இறுதியான நோக்கம் எதுவும் இல்லை எனவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

விபுலாநந்தரைப் பொறுத்தமட்டில் கல்வி என்பது மனிதனை உருவாக்குவது. "விழுப்பத்தை தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யும் கல்வியே கல்வி ஏனையவை கல்வி எனப்படமாட்டாது" இருவரினதும் சிந்தனைகளிலும் கல்வியின் செயல்சார்ந்த அம்சம் முக்கியத்துவம் பெறு கின்றது. கல்வியானது தனியாளது தேவைகள், நாட்டங்கள், பிள்ளைகளின் தூண்டுதல் என்பவற்றுக்கு ஏற்ப கையளிக் கப்படல் வேண்டும் என்பதில் ஒருமனதான கருத்தைக் கொண்டிருந்தார்.

பொருளாதாரச் சமூக வினைத்திறனை (Social Efficincy) டியூவி அழுத்தியுரைக்க விபுலாநந்தா் தொழில்நுட்பக் கல்வி, வேலைவாய்ப்புக்களை வழங்கக் கூடிய கல்வி என்பவற்றுக்கு அழுத்தம் கொடுத்திருந்ததையே அவர் முகாமையாளராகவும், அதிபராகவும் கடைமையாற்றிய பாடசாலைகளின் செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ள லாம். டியூவி அனுபவக் கல்வியை மிக அழுத்தமாக வலியுறுத்தியிருக்கும் அதேவேளை அடிகளாரும் "நம்மை சூழவிருக் கும் பிரபஞ்சம் எனும் தட்டினைப் படித்த நாம் அறிவினைப் பெறுதல் கூடும்" எனக் கூறியிருப்பதையும் நோக்கலாம். செயலும் சிந்தனையும் இணைந்து செல்ல வேண்டும் என்பதே இருவரினதும் கருத்தாகும்.

### 2.5 ஆசிரியர் வகிபாகம்

ஆசிரியர் அறிவுத் தொகுதியை அறிந்திருந்து அதனை மாணவர்களுக்கு வழங்குவது மட்டுமல்ல, வழிகாட்டி ஆற்றுப்படுத்துபவருமாவார் என்பதில் இருவரும் ஒருமித்த கருத்து உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆசிரியர் சிறந்த உளவியலாளராக இருந்து தனியாள் வேறுபாட்டை நன்கு உணர்ந்து தமது பொறுப்பிலுள்ள மாணவர் குழு வுக்கு ஏற்றபடி இருந்து உத்திகளையும் கையாண்டு வழிப்படுத்துபவரே உண்மையான ஆசிரியர்.

ஆசிரியர் தான் அறிந்திருப்பதையிட்டு திருப்தியடையக் கூடாது. எப்பொழுதும் அறிவை இற்றைப்படுத்தி, அகலப் படுத்தி, ஆழப்படுத்தி, பிரயோக மாதிரியாக மாற்றியமைப்

EUSL

பதில் ஆர்வமுள்ளவராக இருத்தல் வேண்டும், என்பதில் இருவரும் ஒரே கருத்துடையவர்களாகக் காணப்படுகின்றனர். இலட்சிய ஆசிரியரின் இலட்சிய மாணவன், சமூகக் கடமையுடவன். அவன் சமூகத்தின் சேவகன் என்பது டியூவியின் கொள்கை. இதே கொள்கையை அடிகளாரும் கொண்டிருந்ததைக் காணலாம். ஒருவர் பெற்ற கல்வி அவர் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும் பயன்படல் வேண்டும் என்பதில் இருவரும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்ததுடன் பல்வேறு இடங்களிலும் நேரடியாகவும், தமது ஆக்கங்களினூடாகவும் அழுத்தி வலியுறுத்தி வந்திருப்பதைக் காணலாம்.

## 2.6 கலைத்திட்ட எண்ணக்கரு

கல்வி என்பது தாயின் கருவறையில் ஆரம்பித்து கல்லறை வரையும் தொடர்கின்றது என்ற கருத்திய லில் இருவரும் ஒருமித்துள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஏற்படும் தேவைகள் வித்தியாசமாக அமையும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது. எனவே கலைத்தட்டம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாக அன்றி நெகிழ்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும், என்பதுடன் பிள்ளையின் முதிர்ச்சிக்கு ஏற்ப கலைத்திட்டம் வரையப்படல் வேண்டும் எனவும் தமது கல்விச் சிந்தனையில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாடசாலை சமூகத்தின் உப தொகுதியாகும். எனவே பாடசாலையானது சகல விடயங்களிலும் வெளியுலகை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். கலைத்திட்டம் பிள்ளையை மையமாகக் கொண்டதாகவும், செயற்பாடுகளை மையமாகக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும், என்பதில் இருவரும் அதிக அக்கறை எடுத்து செயற்படுத்திக் காட்டிய துடன் இவ்விடயத்தில் ஒருமித்த கருத்துடையவர்களாகவும் உள்ளனர். கலைத்திட்டம் அழகியற்கல்வி, ஒழுக்கக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும் என இருவரும் உட்படுத்தியதுடன் விபுலாநந்த அடிகளார் கலைத்திட்டத்தில் சமயக் கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தித் தெரிவித்தார். மேலும் விஞ்ஞானக்கல்வி, பொறியியற் கல்வி என்பவற்றையும், உடற்கல்வி, உடல்நலக் கல்வி, இசைக் கல்வி ஆகிய பாடங்களையும் தான் அதிபராக இருந்த பாடசாலைகளிலும், முகாமையாளராகப் பணியாற்றிய பாடசாலைகளிலும் அதிக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்படுத்திக் காட்டியவர்.

பிள்ளைமைய, வாழ்க்கைமைய, அனுபவமையக் கலைத்திட்டத்தை இருவரும் ஒரு மனதுடன் ஏற்றுக் கொண்டதுடன் கலை, கலாசாரப்பின்னணி, மக்கள் தேவை, தேசிய பாரம்பரியங்கள் என்னும் அம்சங்கள் இருவரின் கலைத்திட்டத்திலும் ஊடுருவியிருப்பதைக் காணலாம்.

## 2.7 ஒழுக்கக் கல்வி

ஒழுக்கம் பற்றிய ஜோன்டியூவியின் கருத்தை நோக்கும் போது செயற்பாட்டை செம்மையான முறையில் செய்து முடிப்பதற்கான பிரதான வளம் ஒழுக்கம் எனக் குறிப்பிடுவதுடன் மன ஆற்றலை வளர்த்தெடுப்பதற்கான சக்தி ஒழுக்கத்தில் தங்கியுள்ளது எனவும் பிள்ளையிடம் ஒழுக்க விருத்தியை ஏற்படுத்துவதற்காக ஒருபோதும் தண்டனை வழங்கக் கூடாது எனவும் அதேவேளை கட்டுப்பாட்டையும் மீறக்கூடாது எனவும் தெரிவிக்கின்றார். ஒழுக்கம் இயற்கையானதாக அமைய வேண்டும் எனத் தெரிவிப்பதுடன் சுய ஒழுக்கத்தையே முதன்மைப்படுத்தி நிற்கின்றார். ஜோன் டியூவியின் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காமல் ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கியது காரணமாக இவரிடம் மாக்ஸியத்தின் செல்வாக்கு ஊடுருவியிருப்பதைக் அவதானிக்க முடிகின்றது.

விபுலாநந்த அடிகளாரைப் பொறுத்த வரையில் கல்விக் குறிக்கோளிலேயே காணப்படும் உணர்வுச் சார்புக் கூற்றினையே, ஒழுக்கக் கல்வி என்கிறார். நல்வாழ்க்கை நெறிகள், புனிதமான நல்லொழுக்கக் கோட்பாடுகள் போன்ற உணர்வுகளைப் பெறுவதற்கான மூலகாரணம் சமயக்கல்வி. இவரது ஒழுக்கம் சம்பந்தமான கோட்பாடு சமய நம்பிக்கை, சமய பக்தி, சமயசேவை, ஆகிய மூன்றும் இணைவதினால் பிறக்கும் சமயநெறியே மனித வாழ்வை அறநெறியில் இட்டுச்செல்லும் ஒரே வழயாகும் என உறுதியுடன் தெரிவிக்கின்றார்.

இருவரும் பிள்ளையின் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என ஒருமனதாக தெரிவிப்பதுடன் சுய ஒழுக்கத்தை வலியுறுத்துவதில் ஒரு மனதான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதைக் காணலாம். ஒழுக்கம் உள்ளத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை இருவரும் ஏற்றுக் கொள்வதுடன் டூயி சனநாயக இலட்சியங்களை பிள்ளையிடம் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை அழுத்தியுரைக்கின்றார். இருவரும் ஒழுக்கம் பிள்ளையிடம் வலிமையாகத் திணிக்கப்படலாகாது என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை சுயவொழுக்கம் கலைத்திட்டத்தினூடாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என்பதையும் அழுத்தியுரைக்கின்றார்.

## 2.8 விழுமியம் பற்றிய எண்ணக்கரு

ஜோன்டியூவியின் பிரதான தத்துவம் பயன்பாட்டுவாத மாகும். பயன்பாட்டுவாதத்தினூடாக பிள்ளை சொந்த விழுமியங்களை செயற்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கின்றார். இவர் "உண்மையிலும்" பார்க்க 'கருமத்தை' முதன்மைப்படுத்தி நிற்பதைக் காணலாம். மேலும் டியூவி உண்மைகள் நித்தியமானவை அல்ல எனவும் அவை சார்பு நிலைப்பட்டவை எனவும் தெரிவிக்கும் அதேவேளை நிலையான விழுமியங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என்பதும் இவரின் நிலைப்பாடாகும்.

EUSL

விபுலாநந்த அடிகளாரைப் பொறுத்தமட்டில் பாரம்பரியங்க ளிற்கும் அதனோடு தொடர்பான உயரிய பண்புகளிற்கும் எப்போதும் முக்கியத்துவம் கொடுத்தவர். ஆற்றொண்ணாத் துன்பம் வந்துற்ற காலை அதனை மாற்றுவதற்கு வழியறி யாது திகைக்கும் உள்ளமானது ஆன்ம நாயகனாகிய இறைவனது திருவடிகளை இயல்பாக நாடிநிற்றலே உயர்ந்த விழுமியம் என்கின்றார்.

## 3. ஆய்வு முறைமையியல்

கல்வியியல் ஆய்வு தொடர்பாக பல ஆய்வுமுறைகள் உள்ளன. அந்த வகையில் ஆய்வாளரால் எடுத்துக்கொள் ளபட்ட ஆய்வுத் தலைப்பை பொறுத்தவரையில் வரலாற்றி யல் ஆய்வுமுறைமையும், ஒப்பீட்டியல் ஆய்வுமுறைமையும் பயன்படுத்தப்படுகின்றது.

வரலாற்றியல் ஆய்வு முறைமையைப் பொறுத்தவரையில் கடந்த கால நிகழ்வினை மீள்பார்வை செய்யும் செயற்பா டாகவே கருதமுடியும். வரலாற்று ஆய்வு என்பதற்குப் பொருத்தமான வரைவிலக்கணம் ‘கடந்த கால நிகழ்வுகள் பற்றிய உண்மைகளை நிலை நாட்டவும் முடிவுகளைப் பெறுவதற்காக ஆதாரங்களைப் பொருத்தமான இடங்களில் இருந்து சேகரித்து அவற்றினை மதிப்பீடு செய்தும், தொகுத் தும் முன்னெடுக்கப்படும் ஆய்வு முறைமையாகும்.

“ஒப்பீட்டுச் சட்டகம், ஒப்பீட்டு இலக்கியம், ஒப்பீட்டு இலக் கணம் போன்ற துறைகளைப் பின்பற்றி ஆராய ஒப்பீட்டுக் கல்வி தோன்றியது. கல்வி முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள், அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் ஒப்பீடு, அவற்றின் விளைகள் பற்றிய பகுப்பாய்வு என்பன ஒப்பீட்டுக் கல்வித்துறையின் பிரதான இலக்குகளாகும்.” ஏன நிக்கிலஸ் ஹன்ஸ் (Nicholas Hans) கூறுகின்றார்.

“கல்வி முறைகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வானது கல்வி முறைகளையும், பிறகலாசாரங்களையும் முறையாகப் பரிசீலனை செய்வது: கல்வி முறைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள், வேற்றுமைகள், அவற்றுக்கான காரணங்கள் பொதுவான பல பிரச்சினைகளைத் தீர்க்க வெவ்வேறான தீர்வுகள் ஏன் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப்பற்றி ஆராய்வது” என வேர்ணன் மலிசன் (Vernon Mallinson) அவர்கள் குறிப்பிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் மேற்கூறிய ஆய்வு முறைமைகளை பயன் படுத்தியே சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள் அமெரிக்கக் கல்வியியலாளரான ஜோன் டூயியின் கல்விச் சிந்தனைகளுடன் ஒப்பிடப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### 3.1 தரவு சேகரித்தல்

“அனைத்துக் கல்விப்புலங்களுமே “தரவு” தரவுகளின் அடிப்படையிலேயே தம் துறைகளுக்கான கருத்தாக்கங் களையும் கோட்பாடுகளையும் உருவாக்குகின்றன எனப் புதுவை மொழியியல் ஆராய்ச்சி நிறுவன விரிவுரையாளர் முனைவர் ச.பிலவேந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வுகளில் தரவுகளை வழங்கும் மூலங்கள் இரண்டு வகைப்படும். அவையாவன

01. முதன்மை மூலங்கள் (Primary Data)
02. துணைமூலங்கள் (Secondary Data)

ஆய்வுப் பிரச்சினையுடன் நேரடியாகத் தொடர்புகொண்ட மூலத்தடங்கள் யாவும் முதன்மை மூலங்களாக கொள்ளப் படும் என்பதற்கு இணங்க சுவாமி விபுலாநந்த அடிகளாரி னாலும் ஜோன்டியூவியினாலும் எழுதப்பட்ட ஆக்கங்கள் இவ் ஆய்வில் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்படு கின்றன. இங்கு குறித்த ஆய்வுப் பொருளோடும், ஆய்வுப் பொருளுக்குரிய காலப்பகுதியோடும் நேரடித் தொடர்பு கொண்டிராத அனைத்தும் துணை மூலங்கள் எனக் கரு தப்படும் சுவாமி விபுலாநந்தரைப் பற்றியும் ஜோன்டுயியைப் பற்றியும் பல்வேறு வகைப்பட்டவர்கள் பல்வேறு வகைப் பட்ட தளங்களில் எழுதிய பல்வேறு வகையான ஆக்கங்க ளும், ஆவணங்களும், ஆய்வுக் கட்டுரைகளும், விமர்சனக் கட்டுரைகளும், திறனாய்வுக் கட்டுரைகளும் இவ் ஆய்வில் துணை மூலங்களாக கொள்ளப்படுகின்றது.

### 3.2 தரவுப்பகுப்பாய்வும் விளக்கமளித்தலும்

சேகரிக்கப்பட்ட தரவுகளைப்பயன்படுத்தி ஆய்வுப் பிரச் சினைக்குத் தீர்வு காணுதல் தொடரும் நிகழ்வாகும். இங்கு முன்னெடுக்கப்படும் ஆய்வு வரலாறு, ஒப்பீட்டு ஆய்வு என்பதால் தரவுகளின் உண்மைத்தன்மையைச் செவ்வை பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். எனினும் ஆவணங்களின் மெய்மைத்தன்மையை உறுதிப்படுத்துவது இலகுவான தொரு விடயமல்ல.

இவ்வாய்வுச் செயற்பாட்டிற்காக கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் குறிப்பிட்டவர்களாலேயே எழுதப்பட்டவை என்பதும் பிற்காலத்தில் இவர்களைப்பற்றி எழுதியவர்கள் துறைசார்ந்த நிபுணர்கள் என்பதாலும் கிடைத்த தரவுகள் கோடலாகக் காணப்படும் சந்தர்ப்பம் குறைவாகவேயுள்ளது.

கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் நன்கு அலசப்பட்டு, ஒன்று சேர்க்கப்பட வேண்டியவை ஒன்று சேர்க்கப்பட்டு, வகைப்படுத்தப்பட வேண்டியவைகள் வகைப்படுத்தப்பட்டு, திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டு இவ்வாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 4. முடிவுரை

இருவரும் இரு வேறுபட்ட பண்பாட்டுச் சூழலில் பிறந்த வர்கள், வளர்ந்தவர்கள், வாழ்ந்தவர்கள். ஜோன்டுயி ஏறக் குறைய 250 வருடங்களுக்குட்பட்ட பாரம்பரியத்தின் வெளி யீடு. ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஏறக்குறைய

2500 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தின் வெளியீடு. இரு பின்புலங்களில் இருந்து தோன்றிய இவர்களின் கல்விச் சிந்தனைகளில் பல் வேறு விடயங்களில் ஒரு மனதுடனும், சில விடயங்களில் மாறுபட்ட சிந்தனைகளுடனும் கருத்துக் களை வெளியிட்டுள்ளனர். இவ்விருவரும் ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக, ஆய்வாளர்களாக கல்விப்புலத்தில் மிளிர்ந் தவர்கள். ஜோன்டூயி அறிவியலுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்த அடிகளார் அறிவிய லுக்கும் ஆன்மீகத்திற்கும் சமசந்தர்ப்பம் வழங்கினார். ஜோன்டூயியின் கல்விச் சிந்தனைகள் அமெரிக்காவைக் கடந்து சீனா, சோவியத் ரஸ்யா, யப்பான், துருக்கி போன்ற நாடுகளின் கல்விச் செயற்பாடுகளை புணரமைத்துக் கொள்ள வழிகாட்டியது. அடிகளாரின் கல்விச் சிந்தனை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் முன்பள்ளிக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி வரை செல்வாக்குச் செலுத்தியது.

1. உயர்கல்வி பெறும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிருவாகிகள் தங்களது கல்வித் தகைமைகள், தொழிற்தகைமைகள் என்பவற்றை விருத்தி செய்து கொள்வதற்கான கருவூலங்கள் இவ் விருவரினதும் சிந்தனைகள் மூலம் வெளிப்பட்டு நிற்கின்றன.
2. ஒரு நாட்டின் கலைத்திட்டம் எவ்வகை அம்சங்களை உள்வாங்க வேண்டும் என்பதை இருவரும் வெளிப்ப டுத்தி நிற்கின்றனர்.
3. கற்பித்தல் உத்தியாக ஆய்வு முறைமையை முன் னெடுப்பதன் மூலம் கல்வியில் பண்பு ரீதியான மேம் பாட்டைக் காணமுடியும் என்பதைச் சான்றுகளுடன் வெளிப்படுத்துகின்றனர்.
4. கல்விப்புலத்தாரின் வகிபாகம் பற்றிய நவீன சிந்த னைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.
5. அறிவை அகலப்படுத்துதல், ஆழப்படுத்துதல், பிர யோக மாதிரியாக ஒழுங்கமைத்தல் கல்விக் கருமத் தொடரில் மிக முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடு கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.
6. கல்விச் செல் நெறியில் காணப்படும் கோட்பாடு – நடைமுறை, தனிமனிதன் - குழு, தனியுரிமை – பொதுவுடைமை, மனம் - நடத்தை, வழிமுறை – முடிவு என்ற இருமைப் பண்புகளை திறனாய்வுக்குட் படுத்தியவர்கள்.

   ஆகிய விடயங்கள் இவ்வாய்வின் மூலம் வெளிப்பட்டு நிற்கின்றன.

சமகால நவீன கல்விச் சிந்தனைகள் இன்று கல்விப் புலத்தில் ஊடுருவினாலும் இவை பற்றிய கருத்தியல்களை என்றோ வெளியிட்டும், நடைமுறைப்படுத்தியும் காட்டிய இவ்விரு தத்துவஞானிகளும் உயிர்ப்புமிகு புலமையாளர் களாகவே என்றும் விளங்குவர்.

**உசாத்துனை நூல்கள்**


வித்துவான் கமலநாதன், சா. இ, சிவசுப்பிரமணியம். வ., (1995) சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி – 01, மட்டக்களப்பு, இலங்கை.

வித்துவான் கமலநாதன், சா. இ, சிவசுப்பிரமணியம். வ., (1995) சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி – 02, மட்டக்களப்பு, இலங்கை.

ஜெயராசா. சபா., (2008) கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும் , கொழும்பு11

பாலசுந்தரம். இ, செபரெத்தினம். க. (2003) விபுலம், கனடா.

சந்தானம். எஸ், (2003), வளரும் இந்தியாவில் கல்வி மேலாண்மை, சென்னை 600017.

சந்திரசேகரம். ப, (பதிப்பாண்டு தரப்படவில்லை), கல்வித்தத்துவம், யாழ்ப்பாணம்.

சந்தானம். எஸ், (1969), கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும், சென்னை – 14.

அருணாசலம். க, (இரண்டாம் பதிப்பு 2002), சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள், கொழும்பு, இலங்கை.

அம்பிகைபாகன். ச, (1976), விபுலாநந்தர் உள்ளம், யாழ்ப்பாணம், இலங்கை.

செபரெத்தினம். க. (1994), விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும், கொழும்பு, இலங்கை.

ஜெயராசா.சபா, (2008), இலங்கையின் கல்வி வரலாறு, கொழும்பு 11.

சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர், (1992), சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு.

kanapathipillai. k, (1991), A Biography – The man and his achievements, Colombo, Sri lanka.


EUSL